சின்னமனூர் நகராட்சி
சின்னமனூர்.
நாள்:– 25.07.2018

சாதாரணக் கூட்டம்

திருவள்ளுவர் ஆண்டு, ஹேவிளம்பி வருடம் ஆடி மாதம் 09–ம் நாள் (ஜீலை திங்கள் 25–ம் நாள்:–25.07.2018) புதன் கிழமையன்று பிற்பகல் 05.00 மணியளவில் சின்னமனூர் நகராட்சி தனி அதிகாரி அவர்களின் தலைமையில் நடைபெற்ற கூட்ட நடவடிக்கைகள் விபரம்.

தனி அதிகாரி மற்றும் ஆணையாளர்
சின்னமனூர் நகராட்சி.

**பொருள் எண்.1**

சின்னமனூர் நகராட்சியில் தற்போது முல்லை பெரியாற்றுப்படுகையில் மூலம் 5.00 மில்லியன் லிட்டர் குடிநீர் தினசரி பெறப்பட்டு சராசரியாக நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 118 லிட்டர் வீதம் ஒரு நாள்விட்டு ஒரு நாள் இடைவெளியில் பொதுமக்களுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. பொது மக்களுக்கு வழங்கப்பட்டு வரும் குடிநீரை அனைத்துப்பகுதி மக்களுக்கும் நல்லமுறையில் சீராக விநியோகம் செய்யும் வகையில் DMA என்ற நிலையில் அமைக்க வேண்டியுள்ளது. இதற்கு குடிநீர் திட்டத்தில் தேவையான உட்கட்டமைப்பு மற்றும் அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்வது சம்மந்தமாக ஆய்வு செய்து கண்டறிய வேண்டியுள்ளது.

மேற்படி DMA முறையில் உட்கட்டமைப்பு மற்றும் அபிவிருத்திப் பணிகள் செய்வதற்கு தனியார் கலந்தறிதற்குரியர் (Private Consultant) மூலம் மேற்கொள்ளும் நிறுவனத்திற்கு ஆலோசணைக் கட்டணத்தை முறைப்படி அனுமதி பெற்று செலுத்த மன்றம் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்கு ஆகும் செலவினை குடிநீர் நிதியில் மேற்கொள்ளலாம்.

**தீர்மான எண், நாள்** **416, நாள்.25.07.2018**

**தீர்மானம்**

*******

**பொருள் எண்.2**

சின்னமனூர் நகராட்சியில் தற்போது புதியதாக கட்டப்பட்டு முடிவுறும் தருவாயில் உள்ள புதிய பேருந்து நிலையத்திற்கு கூடுதலாக அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ள ரூ.110.00 இலட்சம் மதிப்பீட்டில் நான்கு பணிகளுக்கு முறை வழியாக விளம்பரம் கோரப்பட்டு 15.06.2018ம் அன்று தினதந்தி நாளிதழ் மற்றும் மக்கள் குரல் நாளிதழிலில் விளம்பரங்கள் செய்யப்பட்டமைக்கு விளம்பர கட்டணம் கீழ்க்காணும் விவரப்படி தொகை வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

1. தினத்தந்தி தொகை ரூபாய் 9173/–
2. மக்கள் குரல் தொகை ரூபாய்.17766/–

**அலுவலகக் குறிப்பு:–** 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி தொகை நகராட்சி பொது நிதியில் வழங்கலாம்.

**தீர்மான எண், நாள்** **417, நாள்.25.07.2018**

**தீர்மானம்**

*******

**பொருள் எண்.3**

இயக்குநர், கோயம்புத்தூர் தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம் அவர்களின் 02.07.2018ம் தேதிய ந.க.எண்.0431/2018/அ3 எண்ணிட்ட கடிதத்தின்படி 09.07.2018 முதல் 03.08.2018 வரை கோயம்புத்தூர், தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனத்தில் இளநிலை உதவியாளர்களுக்கு நடைபெற இருக்கும் விரிவாக்க பயிற்சியில் (Comprehensive Training Course) Batch-2 இந்நகராட்சி வருவாய் உதவியாளர் திரு.சோ.சுரேஷ் பிரபு கலந்து கொள்ள உணவு மற்றும் தங்கும் வசதிகளுக்கு கட்டணமாக தொகை ரூ.20000/— செலுத்த மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:—** 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி தொகை செலுத்தியதை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.2473/2018/சி1)

**தீர்மான எண், நாள்** **418, நாள்.25.07.2018**

**தீர்மானம்**

*******

**பொருள் எண்.4**

இந்நகராட்சியில் வரப்பெறும் தபால்களுக்கு எண் வழங்க பயன்படுத்தப்படும் நம்பரிங் மெஷின் ஒன்று வாங்க ஆகும் உத்தேச செலவினம் தொகை ரூ.2500/—க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:—** மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.2313/2018/சி1)

**தீர்மான எண், நாள்** **419, நாள்.25.07.2018**

**தீர்மானம்**

*******

**பொருள் எண்.5**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் மே—2018 முதல் ஜீன் 2018 வரை தொடர்ந்து இடியுடன் கூடிய மழை பெய்த காரணத்தினால் அதிக எண்ணிக்கையிலான தெரு விளக்குகள் எரியாமல் போனதை சரி செய்ய ஆகும் செலவினம் தொகை ரூ.65000/—ஐ தற்பொழுது தெருவிளக்கு பராமரிப்பு பணிகள் மேற்கொண்டு வரும் சடையாண்டி ஏஜென்சீஸ், ஆண்டிப்பட்டி அவர்களுக்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:—** பொது மக்கள் நலன் கருதி மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.2717/2018/இ1).

**தீர்மான எண், நாள்** **420, நாள்.25.07.2018**

**தீர்மானம்**

*******

**பொருள் எண்.6**

இந்நகராட்சியில் மின் கம்பியாளராகப் பணிபுரிந்தி திரு.ஆ.துரைராஜ் என்பவர் சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளையில் இவ்வலுவலக 03.05.2018–ம் தேதிய ந.க.எண்.4831/2017/சி1 எண்ணிட்ட குற்றச்சாட்டு குறிப்பாணைக்கு எதிராக தொடர்ந்த W.P.(MD) No.11338/2018 வழக்கிற்கு வழக்கறிஞர் கட்டணம் தொகை ரூபாய்.9500/– திரு.எம்.கருப்பசாமி பாண்டியன் அரசு வழக்கறிஞர்க்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.4831/2017/சி1).

**தீர்மான எண், நாள்** **421, நாள்.25.07.2018**
**தீர்மானம்**

*******

**பொருள் எண்.7**

இந்நகராட்சிக்குச் சொந்தமான நவீன எரிவாயு தகனமேடையில் உள்ள எரிவாயு இயந்திரம் பழுதடைந்துவிட்டதால் M/s Essco Furnaces (P) Ltd., Chennai நிறுவனம் மூலம் பழுதினை சரி செய்ய ஆகும் செலவீன தொகை ரூ.45000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.2551/2012/இ1).

**தீர்மான எண், நாள்** **422, நாள்.25.07.2018**
**தீர்மானம்**

*******

**பொருள் எண்.8**

சின்னமனூர் நகராட்சிப் பகுதியில் செயல்படுத்தப்பட்டு வரும் பாதாள சாக்கடைத் திட்டத்தின் கீழ் விடுபட்ட பகுதிகளில், மேற்படி திட்டத்திற்கான குழாய் பதிக்கும் பணி உள்ளிட்ட பணிகளுக்கான விரிவான திட்ட அறிக்கை தயார் செய்து சமர்ப்பிக்குமாறு, மதுரை நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களால் 05.07.2018ம் அன்று நடத்தப்பட்ட ஆய்வுக் கூட்டத்தில் அறிவுரைகள் வழங்கப்பட்டன.

அதன்படி பாதாள சாக்கடைத் திட்டத்தின் கீழ் விடுபட்ட பகுதிகளில் மேற்படி திட்டத்தினை செயல்படுத்தும் பொருட்டு விரிவான திட்ட அறிக்கையினை தனியார் கலந்தறிதற்குரியர் (Private Consultant) மூலம் தயார் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. விலைப்புள்ளி பெற்று பணி மேற்கொள்ளவும் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்கு விலைப்புள்ளி பெற்று பணி மேற்கொள்ளவும், ஆகும் செலவினை UGD நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.2719/2018/இ1)

**தீர்மான எண், நாள்** **423, நாள்.25.07.2018**
**தீர்மானம்**

*******

**பொருள் எண்.9**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள சமுதாய மற்றும் பொதுக் கழிப்பிடங்கள் 25ல் 22 கழிப்பிடங்களில் தண்ணீர் வசதி, மின் வசதி, குழாய் இணைப்பு மற்றும் சிறு பழுதுகள் சரி செய்து பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் தொகை ரூ.9.50 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணியினை பொது நிதியில் மேற்கொள்ளலாம். (ந.க.எண்.2664/2018/இ1).

**தீர்மான எண், நாள்** **424, நாள்.25.07.2018**
**தீர்மானம்**

*******

**பொருள் எண்.10**

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரை அவர்களின் 25.07.2018ம் தேதிய ந.க.எண்.3188/2013/பி3 மின்னஞ்சலின்படி பொறியாளரின் அலுவலக உபயோகத்திற்காக வழங்கப்பட்ட Airtel கைபேசி சிம் கட்டணம் (அக்டோபர் 2017 முதல் மே 2018 வரையிலான) ரூ.5150/–க்கான வங்கி காசோலையாக வழங்க நகர்மன்ற அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை பொது நிதியில் இருந்து ஈடுசெய்யலாம். (ந.க.எண்.2895/2018/இ4).

**தீர்மான எண், நாள்** **425, நாள்.25.07.2018**
**தீர்மானம்**

*******

**பொருள் எண்.11**

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் இயங்கி வரும் TN60T4228 என்ற டம்பர் பிளேசர் வாகனத்திற்கு 2018–2019ம் ஆண்டிற்கான இன்சூரன்ஸ் தொகையாக ரூ.43396/– மட்டும் தேனி, யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட் நிறுவனத்திற்கு செலுத்தக் கோரி பட்டியல் வரப்பெற்றுள்ளது.

எனவே, மேற்படி தொகையினை யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் நிறுவனத்திற்கு செலுத்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. இச்செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம். (ந.க.எண்.0308/2018/எச்1)

**தீர்மான எண், நாள்** **426, நாள்.25.07.2018**
**தீர்மானம்**

*******

**பொருள் எண்.12**

இந்நகராட்சியின் அனுமதியற்ற மனைகளை வரன்முறைப்படுத்தும் பொருட்டு, வரப்பெற்ற அரசாணை மற்றும் வரன்முறைப்படுத்த தேவையான விவரங்கள் குறித்து பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தவும், மனையினை வரன்முறைப்படுத்த உரிய தகவல்கள் தெரிவிக்கும் பொருட்டும் மற்றும் சிறப்பு முகாம் நடைபெறுவது பற்றி தெரிவிக்கவும் இவ்வலுவலக கடிதம் ந.க.எண்.4912/2017/எப்1, நாள்.29.06.2018–ன்படி செய்தித்தாளில் விளம்பரம் வெளியிட்ட செய்தி மற்றும் மக்கள் தொடர்பு அலுவலர் தேனி அவர்களுக்கு கடிதம் அனுப்பியதில் வணக்கம் இந்தியா மற்றும் தினமணி நாளிதழ்களில் செய்திகள் வெளியிடப்பட்டமைக்கு கீழ்க்காணும் விவரப்படி உள்ள செலவினம் ரூ.24968/–க்கு நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண். | செய்தித்தாள் பெயர் | விளம்பரக் கட்டணம் |
|---|---|---|
| 1. | வணக்கம் இந்தியா | ரூ.8000/– |
| 2. | தினமணி (Express Publication) | ரூ.16968/– |
| | மொத்தம் | 24968/– |

**அலுவலகக் குறிப்பு:–** 1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்காணும் செலவினம் வருவாய் நிதியில் மேற்கொள்வதை ஏற்கலாம். (ந.க.எண்.4912/2017/எப்1

**தீர்மான எண், நாள்** **427, நாள்.25.07.2018**
**தீர்மானம்**

*******

**பொருள் எண்.13**

சின்னமனூர் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் இயங்கி வரும் TN60Z2921 என்ற டிராக்டர் வாகனத்திற்கு 2018–2019ம் ஆண்டு தகுதிச் சான்று புதுப்பிக்கும் பொருட்டு மராமத்து பணிகள் மேற்கொள்வதற்கும், அதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.90000/–க்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. இச்செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம். (ந.க.எண்.8212/2018/எச்1)

**தீர்மான எண், நாள்** **428, நாள்.25.07.2018**
**தீர்மானம்**

*******

பொருள் எண்.14

இந்நகராட்சிக்குட்பட்ட கீழ்க்கண்ட காலியிடத்தில் நகர்மன்றத் தீர்மான எண்.428, நாள்.28.09.2015–ல் அனுமதிக்கப்பட்டபடி தரைவாடகை அடிப்படையில் கடைகள் அமைத்து நடத்துவதற்கு 11.07.2018ம் தேதி மறு பொது ஏலத்துடன் கூடிய ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற கீழ்க்கண்ட விவரப்படியான ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பரிசீலனைக்கும் முடிவிற்கும்.

| வ.எண். | கடை எண். | ஒப்பந்தக்காரர் பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்த விலை விகிதம் |
|---|---|---|---|
| முத்தாலம்மன் கோவில் தெரு அரசு மருத்துவமனை எதிர்புறம் உள்ள காலியிடத்தில் தரைவாடகை கடை அமைத்தல் | | | |
| 1. | 1 | க.பாரி அய்யனார் த/பெ.வி.கல்யாணி ஆசாரி, சாமிகுளம், சின்னமனூர் | மாத வாடகை ரூ.410/– |
| 2. | 1 | ரா.ராமசாமி, த/பெ.ராமசாமி, வ.எண்.2, முத்தாலம்மன் கோவில் தெரு, சின்னமனூர் | மாத வாடகை ரூ.350/– |
| 3. | 2 | எம்.விஜயகுமார், த/பெ.முருகவேல், கதவு எண்.125, சாமிகுளம் 2வது தெரு, சின்னமனூர் | மாத வாடகை ரூ.400/– |
| 4. | 2 | க.முருகவேல், த/பெ.கந்தசாமி தேவர், முத்தாலம்மன் கோவில் தெரு, சின்னமனூர் | மாத வாடகை ரூ.300/– |

**அலுவலகக் குறிப்பு:–** 1. மேற்கண்ட இனங்களுக்கு யாரும் ஏலம் கோர முன்வரவில்லை.
2. மேற்கண்ட இனங்களுக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் ஒவ்வொரு கடைக்கும் உயர்ந்த பட்ச ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.6550/2015/அ2)

**தீர்மான எண், நாள்** **429, நாள்.25.07.2018**

**தீர்மானம்**

*******

**பொருள் எண்.15**

இந்நகராட்சிக்குட்பட்ட கீழ்க்கண்ட காலியிடத்தில் நகர்மன்றத் தீர்மான எண்.382, நாள்.31.05.2018–ல் அனுமதிக்கப்பட்டபடி தரைவாடகை அடிப்படையில் கடைகள் அமைத்து நடத்துவதற்கு 24.07.2018ம் தேதி பொது ஏலத்துடன் கூடிய ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற கீழ்க்கண்ட விவரப்படியான ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பரிசீலனைக்கும் முடிவிற்கும்.

| வ.எண். | கடை எண். | ஒப்பந்தக்காரர் பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்த விலை விகிதம் |
|---|---|---|---|
| பழைய நகராட்சி அலுவலக வளாகத்தில் கட்டப்பட்ட கட்டண கழிப்பறை அருகில் வடக்கு பக்கம் உள்ள காலியிடத்தில் தரை வாடகை அடிப்படையில் கடை அமைத்தல் | | | |
| 1. | 1 | பி.கந்தகுமார், த/பெ.பி.கணபதி, 162சி, சுப்பன் தெரு, தேனி. | மாத வாடகை ரூ.2610/– |
| 2. | 1 | எம்.எஸ்.திலகர், த/பெ.சங்கையா, வ.எண்.2, சாமிகுளம் 3வது தெரு, சின்னமனூர். | மாத வாடகை ரூ.1100/– |

**அலுவலகக் குறிப்பு:–** 1. மேற்கண்ட இனங்களுக்கு யாரும் ஏலம் கோர முன்வரவில்லை.

2. மேற்கண்ட இனங்களுக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் உயர்ந்த பட்ச ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.6550/2015/அ2)

**தீர்மான எண், நாள்** **430, நாள்.25.07.2018**

**தீர்மானம்**

*******

**பொருள் எண்.16**

இந்நகராட்சிக்குட்பட்ட கீழ்க்கண்ட காலியிடத்தில் நகர்மன்றத் தீர்மான எண்.404, நாள்.29.06.2018–ல் அனுமதிக்கப்பட்டபடி தரைவாடகை அடிப்படையில் கடைகள் அமைத்து நடத்துவதற்கு 24.07.2018ம் தேதி பொது ஏலத்துடன் கூடிய ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற கீழ்க்கண்ட விவரப்படியான ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பரிசீலனைக்கும் முடிவிற்கும்.

| வ.எண். | கடை எண். | ஒப்பந்தக்காரர் பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்த விலை விகிதம் |
|---|---|---|---|
| பழைய பாளையம் ரோட்டில் பொன்னுச்சாமி தியேட்டர் எதிர்புறம் உள்ள காலியிடத்தில் தரை வாடகை அடிப்படையில் கடைகள் அமைத்தல் | | | |
| 1. | 1 | க.பழனீஸ்வரி, க/பெ.பா.கண்ணன், தேவர் நகர் 1வது தெரு, க.க.குளம், சின்னமனூர் | மாத வாடகை ரூ.400/– |
| 2. | 1 | க.யுவராஜா, த/பெ.கண்ணன், பத்மநாபன் கோவில் தெரு, சின்னமனூர் | மாத வாடகை ரூ.350/– |

**அலுவலகக் குறிப்பு:–** 1. மேற்கண்ட இனங்களுக்கு யாரும் ஏலம் கோர முன்வரவில்லை.

2.மேற்கண்ட இனங்களுக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் உயர்ந்த பட்ச ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.6550/2015/அ2)

**தீர்மான எண், நாள்** **431, நாள்.25.07.2018**

**தீர்மானம்**

*******

## பொருள் எண்.17

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.27, பள்ளிக்கோட்டைபட்டியில் உள்ள நகராட்சி பள்ளியில் சத்துணவு கூடத்தை மராமத்து செய்யும் பணிக்கு ரூ.1.00 இலட்சம் மதிப்பீட்டில் பணி மேற்கொள்ள 17.07.2018ம் தேதியன்று வரப்பெற்ற கீழ்க்கண்ட விவரப்படி மன்ற அனுமதி வேண்டி அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

1. திரு.எஸ்.சந்திரன், ஒப்பந்ததாரர் – 0.30% மதிப்பீட்டைவிட குறைவு

2. திரு.கே.முனிசாமி, ஒப்பந்ததாரர் – 0.07% மதிப்பீட்டைவிட அதிகம்

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு:–** | **குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள (0.30% ) திரு.எஸ்.சந்திரன் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.1937/2018/இ1).** |
| **தீர்மான எண், நாள்** | **432, நாள்.25.07.2018** |
| **தீர்மானம்** | |

*******

## பொருள் எண்.18

இந்நகராட்சிக்குச் சொந்தமான அய்யனார்புரத்தில் உள்ள அங்கன்வாடி மையத்தில் கழிப்பறை வசதி, காளியம்மன் கோவில், சீப்பாலக்கோட்டை ரோட்டில் உள்ள அங்கன்வாடி மையங்களுக்கு மின்வசதி செய்யும் பணி மற்றும் 8 அங்கன்வாடி மையங்களுக்கு குடிநீர் வசதி செய்யும் பணிக்கு ரூ.1.00 இலட்சம் மதிப்பீட்டில் பணி மேற்கொள்ள 17.07.2018ம் தேதியன்று வரப்பெற்ற கீழ்க்கண்ட விவரப்படி மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

1. திரு.எஸ்.சந்திரன், ஒப்பந்ததாரர் – 0.11% மதிப்பீட்டைவிட குறைவு

2. திரு.கே.முனிசாமி, ஒப்பந்ததாரர் – 0.07% மதிப்பீட்டைவிட அதிகம்

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு:–** | **குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள (0.11% ) திரு.எஸ்.சந்திரன் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.1403/2018/இ1).** |
| **தீர்மான எண், நாள்** | **433, நாள்.25.07.2018** |
| **தீர்மானம்** | |

*******

**பொருள் எண்.19**

இந்நகராட்சிக்குச் சொந்தமான ஆடுவதை செய்யும் இடத்திற்கு அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ள ரூ.3.00 இலட்சம் மதிப்பீட்டில் பணி மேற்கொள்ள 17.07.2018ம் தேதியன்று வரப்பெற்ற கீழ்க்கண்ட விவரப்படி மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

1. திரு.கே.வனராஜ், ஒப்பந்ததாரர் – 0.86% மதிப்பீட்டைவிட குறைவு

2. திரு.ஆர்.பரமானந்தன், ஒப்பந்ததாரர் – 0.20% மதிப்பீட்டைவிட அதிகம்

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு:–** | **குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள (0.86% ) திரு.கே.வனராஜ் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.1520/2018/இ1).** |
| **தீர்மான எண், நாள்** | **434, நாள்.25.07.2018** |
| **தீர்மானம்** | |

*******

**பொருள் எண்.20**

இந்நகராட்சிக்குச் சொந்தமான அம்மா உணவகத்தில் சில மராமத்துப் பணிகள் மேற்கொள்ள ரூ.0.60 இலட்சம் மதிப்பீட்டில் பணி மேற்கொள்ள 17.07.2018ம் தேதியன்று வரப்பெற்ற கீழ்க்கண்ட விவரப்படி மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

1. திரு.ஆர்.பரமானந்தன், ஒப்பந்ததாரர் – 0.27% மதிப்பீட்டைவிட குறைவு

2. திரு.கே.வனராஜ், ஒப்பந்ததாரர் – 0.16% மதிப்பீட்டைவிட அதிகம்

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு:–** | **குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள (0.27% ) திரு.ஆர்.பரமானந்தன் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.1292/2018/இ1).** |
| **தீர்மான எண், நாள்** | **435, நாள்.25.07.2018** |
| **தீர்மானம்** | |

*******

**பொருள் எண்.21**

இந்நகராட்சி அலுவலக கட்டிடத்தில் உள்ள கழிப்பறையை சரி செய்யும் பணி, ஜெனரேட்டருக்கு மேற்கூரை மற்றும் குடிநீர் வசதி செய்யும் பணி மேற்கொள்ள ரூ.3.10 இலட்சம் மதிப்பீட்டில் பணி மேற்கொள்ள 17.07.2018ம் தேதியன்று வரப்பெற்ற கீழ்க்கண்ட விவரப்படி மன்ற அனுமதி வேண்டி அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

1. திரு.எஸ்.சந்திரன், ஒப்பந்ததாரர் – 0.32% மதிப்பீட்டைவிட குறைவு

2. திரு.கே.முனிசாமி, ஒப்பந்ததாரர் – 0.17% மதிப்பீட்டைவிட அதிகம்

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு:–** | **குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள (0.32% ) திரு.எஸ்.சந்திரன் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.1626/2018/இ1).** |

| | |
|---|---|
| **தீர்மான எண், நாள்** | **436, நாள்.25.07.2018** |
| **தீர்மானம்** | |

*******

## பொருள் எண்.22

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.01, கருப்பையா தெருவில் மழைநீர் வடிகாலுடன் கூடிய பேவர் பிளாக் சாலை அமைக்கும் பணிக்கு ரூ.8.50 இலட்சம் மதிப்பீட்டில் பணி மேற்கொள்ள 17.07.2018ம் தேதியன்று வரப்பெற்ற கீழ்க்கண்ட விவரப்படி மன்ற அனுமதி வேண்டி அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

1. திரு.ஆர்.பரமானந்தன், ஒப்பந்ததாரர் – 0.15% மதிப்பீட்டைவிட குறைவு

2. திரு.கே.வனராஜ், ஒப்பந்ததாரர் – 0.32% மதிப்பீட்டைவிட அதிகம்

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு:–** | **குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள (0.15%) திரு.ஆர்.பரமானந்தன் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.1888/2018/இ1).** |
| **தீர்மான எண், நாள்** | **437, நாள்.25.07.2018** |
| **தீர்மானம்** | |

*******

## பொருள் எண்.23

இந்நகராட்சிக்குட்பட்ட கண்ணம்மாள் கார்டன்–1, லெட்சுமி நகர்–3 மற்றும் சிவசக்தி நகர்–3 ஆக மொத்தம் 7 இடங்களில் உள்ள பார்க்கிற்கு முள்வேலி மற்றும் கேம் அமைக்கும் பணிக்கு ரூ.8.50 இலட்சம் மதிப்பீட்டில் பணி மேற்கொள்ள 17.07.2018ம் தேதியன்று வரப்பெற்ற கீழ்க்கண்ட விவரப்படி மன்ற அனுமதி வேண்டி அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

1. திரு.ஆர்.பரமானந்தன், ஒப்பந்ததாரர் – 0.23% மதிப்பீட்டைவிட குறைவு

2. திரு.கே.வனராஜ், ஒப்பந்ததாரர் – 0.37% மதிப்பீட்டைவிட அதிகம்

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு:–** | **குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள (0.23%) திரு.ஆர்.பரமானந்தன் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.1590/2018/இ1).** |
| **தீர்மான எண், நாள்** | **438, நாள்.25.07.2018** |
| **தீர்மானம்** | |

*******

**பொருள் எண்.24**

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதியில் உள்ள ஆழ்குழாய் கிணறுகளில் ஏற்படும் பழுதுகளை நீக்குதல் மற்றும் மராமத்துப் பணிகள் மேற்கொள்ள ரூ.9.90 இலட்சம் மதிப்பீட்டில் பணி மேற்கொள்ள 17.07.2018ம் தேதியன்று வரப்பெற்ற கீழ்க்கண்ட விவரப்படி மன்ற அனுமதி வேண்டி அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

1. திரு.ஆர்.பரமானந்தன், ஒப்பந்ததாரர் – 0.08% மதிப்பீட்டைவிட குறைவு

2. திரு.கே.வனராஜ், ஒப்பந்ததாரர் – 0.48% மதிப்பீட்டைவிட அதிகம்

**அலுவலகக் குறிப்பு:–** **குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள (0.08%) திரு.ஆர்.பரமானந்தன் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.1450/2012/இ2).**

**தீர்மான எண், நாள்** **439, நாள்.25.07.2018**

**தீர்மானம்**

*******

**பொருள் எண்.25**

இந்நகராட்சியின் குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு, குடிநீர் விநியோகம் செய்ய உபயோகப்படுத்தப்படும் வாயு குளோரின் சிலிண்டர்கள் விநியோகம் செய்யும் பணிக்கு ஆகும் செலவினத்திற்கு நகர்மன்றத் தீர்மானம் எண்.401, நாள்.31.05.2018ன்படி நிர்வாக அனுமதி பெறப்பட்டதை தொடர்ந்து இவ்வலுவலக ந.க.எண்.2381/2011/இ2, நாள்.21.06.2018ன் படி ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு செய்யப்பட்டதில், கீழ்க்காணும் விவரப்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | விவரம் | தொகை (1 எண்ணம் குளோரின் சிலிண்டர்) |
|---|---|---|
| 1. | சத்யா டைங் & கெமிக்கல்ஸ் | ரூ.21700/– |
| 2. | பியூப்பில் கெமிக்கல்ஸ் & இன்டஸ்ட்ரிஸ் நிறுவனம் | ரூ.22500/– |

**அலுவலகக் குறிப்பு:–** **வரிசை எண்.1–ல் காணும் நிறுவனத்தின் குறைவான ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.2381/2011/இ2).**

**தீர்மான எண், நாள்** **440, நாள்.25.07.2018**

**தீர்மானம்**

*******